2005 மார்ச் 4]

நடவடிக்கை எடுத்திருக்கிறாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

70—

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

***30609—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு, இயந்திரத் தளவாட முதலீட்டிற்கு 15 சதவிகிதமாக உள்ள மானியத்தை 25 சதவிகிதமாக உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களை நகர்ப்புறங்களாக மாற்றி, கிராமப்புறங்களிலே உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் அதிகரிக்கின்ற மிக அற்புதமான திட்டமான மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே, இயந்திரத் தளவாடங்களுக்கு 15 சதவிகிதம் மானியம் வழங்கப்படுவதுபோல்—அது அதிகரிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும், முதலீட்டாளர்களை, தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துகின்ற, உற்சாகப்படுத்துகின்ற வகையிலே வேறு என்னவிதமான சலுகைகள் அரசினுடைய சார்பிலே வழங்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஊரகப் பகுதிகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்காகவும், ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்காகவும், ஊரகப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய திட்டம் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இதன் மூலமாக, தொழிற்சாலைகளில் நிறுவப்படுகின்ற மின்னாக்கியின் முதலீட்டில் 15 சதவிகிதம், அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரையிலும், தொழிற்சாலையில் 50 சதவிகிதத்திற்கு மேல் மகளிரைப் பணிக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்குக் கூடுதல் மானியமாக முதலீட்டில் 5 சதவிகிதம், 5 இலட்சம் ரூபாய் வரையிலும், தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள், இதில் எது முந்தியதோ அந்த நாளிலிருந்து வசூலிக்கப்பட்ட மின் கட்டணத்திலிருந்து முதல் ஆண்டு 30 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 20 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 10 சதவிகிதம் என 3 ஆண்டுகளுக்கு மின் மானியம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்ற நல்ல பல சலுகைகளைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பின்னாலே, எத்தனை மாவட்டங்களிலே இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி எத்தனைத் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன? எத்தனைத் தொழில்கள் தொடங்கப்பட்டு இன்றைக்குப் பயனாளிகள் பயன்பெற்றிருக்கிறார்கள்? புதுக்கோட்டை மாவட்டத்திலே இதுபோன்ற புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழே எத்தனைத் தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஒரு கோடி முதலீட்டிற்குக் குறையாத அளவிற்கு வேளாண் சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. 25-2-2005 நிலவரப்படி, 385 ஊராட்சி ஒன்றியங்களில் 144 ஒன்றியங்கள் சார்ந்த 213 தொழில் அலகுகள் ரூ.138.43 கோடி முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுதவிர கூடுதலாக

2005 மார்ச் 4]

புதுக்கோட்டை உள்பட 88 ஊராட்சி ஒன்றியங்களில் 165 திட்டங்கள் ரூ.108.36 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்டு இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

71—

புதிய தொழில் மையம்

***31674—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தில் சிட்கோ மூலம் புதிய தொழில் மையம் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தில் சிட்கோ மூலம் புதிய தொழில் மையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஊத்தங்கரையில் 41.25 ஏக்கர் நிலம் பெறப்பட்டு அதில் ஒரு பகுதி மேம்படுத்தப்பட்டு தொழிற்பேட்டை 1995-96-ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்பேட்டையில் கட்டப்பட்ட 5 தொழிற்கூடங்களில் ஒரு தொழிற்கூடம் தனியார் சிறு தொழில் நிறுவனம் ஒன்றிற்கு 1997-98 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படித் தொழிற்கூடத்திற்கான அப்போதைய விலை ரூ.6 இலட்சத்து 94 ஆயிரத்து 600 என நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் கிரயத் தொகையினை சிறு தொழில் நிறுவனம் செலுத்த